**CC**.**No**.116/2023

**Date**: 07.02.2026

**எ.சா. 1. சுரேஷ் த/பெ. சொக்கலிங்கம், வயது 46/2026, காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) புகார்தாரர் அனுப்பிய இரண்டு அறிவிப்புகளையும் பெற்றுக்கொண்டேன். மேற்படி அறிவிப்புகள் அலுவல முகவரிக்கும், வீட்டு முகவரிக்கும் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு அறிவிப்புளையும் நான் கையெழுத்து செய்து பெற்றுக்கொண்ட **அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (2 எண்ணிக்கை) ம.சா.ஆ. 5 ஆக** தாக்கல் செய்யப்படுகிறது. புகார்தாரர் தாவா வழக்கில் 20.09.2021ம் தேதியிட்ட ம.சா.ஆ. 1 கடனுறுதிசீட்டு மூலம் கடன் பெற்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.2 வாடகை ஒப்பந்தத்திற்கு முன்பு நான் பொன்நகரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் கல்லூரியில் பாடம் நடத்துவது நான் ஏற்கனவே படித்ததை நினைவில் வைத்து பாடம் நடத்துவேன் என்றால் சரிதான். அழகப்பா பல்கலைகழகத்தில் பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் நான் உறுப்பினர் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் நான் கடன் வாங்க வேண்டும் என்றால் அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து நான் கையொப்பம் செய்து கொடுத்தால்தான் கடன் வாங்கமுடியும் என்றால் சரிதான்.

2) எனக்கு பழைய விசயங்களை நினைவில் வைத்துக்கொண்டு பாடம் நடத்தும் ஆற்றல் உள்ளது என்றால் சரிதான். என் மீது புகார்தாரர் சி.சி. 117/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கும் நிலுவையில்

உள்ளது என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளும் நிலுவையில் உள்ள போது நான் கடந்த 10.09.2024 அன்று நானும் என் மனைவியும் புகார்தாரர் வீட்டிற்கு சென்று அவரை சந்தித்து பல்கலைகழக கூட்டுறவு சங்கத்தில் நான் கடன் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளேன் அதை பெற்று கடனை திருப்பி தந்துவிடுவதாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல. என் மனைவி பெயர் என்னவென்றால் எஸ். பானுப்பிரியா. என் மனைவி பானுப்பிரியா மைக்ரோ பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வந்ததாக புகார்தாரர் சொல்வது சரியல்ல. என் மனைவி நடத்திவந்த பானுப்பிரியா மைக்ரோ பைனான்ஸ் மூலம் பல நபர்களிடம் பணத்தை பெற்று திருப்பி செலுத்தாததால் என் மீது காவல் துறையில் பல நபர்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

3) என் மீது அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் எத்தனை புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் புகாரும் கொடுக்கவில்லை, விசாரிக்கவும் இல்லை. சி.சி. 117/2023 ல் குறுக்கு விசாரணை முடிந்த பின்னர் நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். என் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டிருந்ததையும் நான் புகார் அளித்த விபரத்தையும் மேற்படி சி.சி. 117/2023 ன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் தாலுகா, சாத்தரசன் கோட்டை அஞ்சல், பொன்னளி கிராமம் என்றால் சரிதான். மேற்படி கிராமத்தில் என் அப்பாவிற்கு நன்செய் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலமும் காலையார்கோவில்

சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 646/1997 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே முகவரியில்தான் என் அப்பாவும் என் சகோதரர் மகேந்திரன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி அதே ஊரில் என் சகோதரருக்கு பாத்தியமான சொத்து காலையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 97/2019 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி இரண்டு ஆவணங்களையும் 10.09.2024 ம் தேதியன்று புகார்தாரரை நானும் என் மனைவியும் சந்தித்து கூட்டுறவு சங்க கடன் ஏற்பாடு செய்துள்ளதாகவும், மேற்படி தொகையை திருப்பி கொடுத்துவிட்டு மேற்படி அசல் ஆவணங்களை திருப்பி பெற்றுக்கொள்வதாக கூறி புகார்தாரரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு அசல் கிரைய ஆவணங்களையும் ம.சா.ஆ. 6 மற்றும் ம.சா.ஆ. 7 ஆகும்.

4) என் மீது எத்தனை வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் இந்த வழக்குகளை தவிர வேறு இரண்டு வழக்குகளும் நிலுவையில் உள்ளது. பொதுவாக கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்தவர்கள் மற்றும் வாங்கியவர்கள் பற்றிய நடவடிக்கை சம்பந்தமாக அதில் உள்ள சாட்சிகளை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் கடந்த 09.09.2021 மற்றும் 20.09.2021 ஆகிய தேதிகளில் புகார்தாரர் வீட்டில் வைத்து ரூ. 5 லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு 20.09.2021 ம் தேதி ம.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக ம.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் ம.சா.ஆ.1ன் படி கடன் தொகையை திருப்பி செலுத்தும்

பொருட்டு கொடுக்கப்பட்ட தாவா வழக்கு காசோலையை புகார்தாரருக்கு வழக்கு காசோலை தேதியை எழுதிக்கொடுத்துவிட்டு புகார்தாரரிடம் பெற்ற தொகையை மோசம் செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தற்போது இல்லை என்று கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.1, 2 ஆவணங்கள் இவ்வழக்கிற்காக பின்யோசனையின்பேரில் என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் இருந்து பெற்ற கடனை திரும்ப செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.07 18:11:12 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)